www.ecourtsindia.com

சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்
**OS.No. 1134 / 2022**

வா.சா.2. ஜெயராஜ் 03.10.2024

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

எனக்கு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் வாதி கேட்டுக்கொண்டதற்கினங்க நான் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான். வாதி எனக்கு நல்ல பழக்கவழக்கம் என்றால் சரிதான். வாதியால் எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி அவருடைய பட்டா ரத்தானதால் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளார். வாதி யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று அவர்கள் பெயர் தெரியாது. அப்போது இந்த தாவாவில் உள்ள பிரதிவாதிகளை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்தில் வாதிகளுக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே என்ன பிரச்சனை இருந்து வருகிறது என்றால் எனக்கு முழுமையாக தெரியாது. ஆனால் பட்டா ரத்தான விபரம் மட்டும் தெரியும். எனது நிலத்திற்கு எந்த பகுதியில் தாவா சொத்து உள்ளது என்றால் எனது நிலத்திற்கு அருகில் வடக்கில் காளீஸ்வரி நிலம் உள்ளது. காளீஸ்வரி நிலத்திற்கு கிழக்கே தாவா சொத்து உள்ளது. நான் கிரையம் வாங்கியதாக சொல்லும் சொத்து குறித்த கிரைய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் ஒப்படைத்துள்ளேன். பட்டாவை ரத்து செய்த விபரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் நானும் அவரும் ஆர்.டி.ஓ அலுவலகம் சென்றபோது தெரியும். எனது பட்டாவும் ரத்தாகிவிட்டது. எனது பட்டா ரத்தான விபரம் குறித்து நான் பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது பெயரில் இருந்த பட்டா ரத்தாகி தற்போது யார் பெயரில் மாறியுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. 2, 3 பிரதிவாதிகள் பெயரில் பட்டா மாறியுள்ளது என்றால் எனக்கு தெரியாது. எனது பெயரில் உள்ள சொத்திற்கு பட்டா ரத்தாகிவிட்டது என்பது குறித்து பழனி கோட்டாட்சியரிடமிருந்து எனக்கு அறிவிப்பு வந்தது என்றால் சரிதான். அந்த விபரம் அடங்கிய குறிப்பாணையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்தகுறிப்பாணையில் பட்டா 2, 3 பிரதிவாதிகள் பெயரில் மாற்றம் ஆகியுள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஞாபகமில்லை. எனக்கு அனைத்து விபரங்களும் தெரியும் என்றும் வேண்டுமென்றே நீதிமன்றத்தில் உண்மை விபரங்களை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முருகராஜ் என்பவரிடம் கிரையம் வாங்கினேன் என்றும் அந்த முருகராஜ் திருப்பதியிடம் கிரையம் பெற்றார் என்று நான் எனது பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ளேன் என்றால்

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNDG190039132022/truecopy/order-4.pdf

சரிதான். ஏற்கனவே நீதிமன்றத்தின் மூலம் 2, 3 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்த நிலையில் 1ம் பிரதிவாதி கிரைய தொகையை பெற்றுக் கொள்ளாமல் வாதிக்கும் முருகராஜ் என்பவருக்கும் கிரையம் செய்து கொடுத்ததாக ஒரு ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளார்கள் என்றும் அந்த முருகராஜ் உரிமை இல்லாத நிலத்தை எனக்கு எழுதிக் கொடுத்ததாக ஒரு ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும் அதற்கு ஆதரவாக நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முறையாக கிரையம் பெற்றுள்ளேன். நானும் அந்த சொத்தை சரியான மறுபயன் செலுத்தாமல் முருகராஜ் எனது பெயருக்கு பெயரளில் எழுதி வைத்த கிரைய பத்திரத்தின் அடிப்படையில் பின்னால் உரிமை ஏற்படும் என்பதற்காக வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2-ம் பிரதிவாதியின் கணவரும் 3-ம் பிரதிவாதியின் தகப்பனரான கந்தசாமி அவர்களுக்கு நீதிமன்றம் கிரையம் மூலம் எழுதி பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளதாலும் அன்றைய தேதியில் இருந்து இன்றைய தேதி வரையிலும் தாவா சொத்து 2, 3 பிரதிவாதிகளின் சுவாதீனத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. பட்டா மட்டும் எனது பெயரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும் தாவா சொத்தில் எந்த காலத்திலும் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. இந்த விபரம் தெரிந்து தான் 2, 3 பிரதிவாதிகள் மனு கொடுத்து பட்டா ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த பட்டா ரத்து செய்யப்பட்டது குறித்து நான் திண்டுக்கல் வருவாய் மேல்முறையீட்டு அலுவலரிடம் மேல் முறையீடு தாக்கல் செய்துள்ளேன். அந்த விபரங்கள் குறித்து நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். நான் அந்த மேல்முறையீட்டு எண் என்ன என்றும் அதன் நிலை என்ன என்று நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு ஞாபகமில்லை. இது சம்மந்தமாக நான் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் அதனால் எனது வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2024.10.03 17:49:25 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNDG190039132022/truecopy/order-4.pdf

www.ecourtsindia.com